# அவர் பரிசுத்தத்தில் பங்கு பெறுதல்

போதகர் P.V Jesudas

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**க**ர்த்தர் பரிசுத்தராக இருக்கிறார், அவர் பரிசுத்தத்தை சிநேகிக்கிறார். அந்த பரிசுத்த ஆண்டவரை காண்பதற்கும், பரிசுத்த பரலோகத்திற்கு நாம் போவதற்கும், நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எப்படி பரிசுத்தமாக வேண்டும்? எதனால் நாம் பரிசுத்தமாக்கப்படுவோம்?

இன்றைக்கு இந்த உலகத்தில் எத்தனையோ மார்க்கங்கள் இருக்கின்றன. இந்த மார்க்கங்கள் யாவும், பரிசுத்தத்தை மனிதன் எப்படி அடைந்துக் கொள்ளமுடியும்? என்ற கேள்வியை எழுப்பு கிறது.

**அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. – ரோமர் 3:10.**

இந்த உலகத்தில் நீதிமான் ஒருவனும் இல்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஏசாயா தீர்க்கதரிசி ஆண்டவருடைய சநிதானத்தை சந்தித்தபோது என்ன சொல்லுகிறார்?

**ஐயோ, பாவமுள்ள ஜாதியும் அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக் கிறார்கள்; கர்த்தரை விட்டு, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோப முண்டாக்கி, பின்வாங்கிப்போனார்கள். இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்படவேண்டும்? அதிகமாய் விலகிப்போகிறீர்களே; தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது. உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமில்லை; அது காயமும் வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், இருக்கிறது. – ஏசாயா 1:4,5,6.**



இன்றைக்கு மக்கள், தங்கள் வாழ்க்கையிலே ஏதோ நல்லது செய்து, புண்ணியங்களை சம்பாதித்தோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் வேதம் சொல்லுவது என்ன?

**நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது. – ஏசாயா 64:6.**

நாம் செய்வது நீதியான காரியங்கள் என்று நினைக் கிறோமே, அது கடவுளின் பார்வையிலே அழுக்கான கந்தைத் துணிபோல இருக்கிறது. நம்முடைய வாழ்க்கையிலே, கடவுள் பார்வையிலே அசுத்தர்களாகவும், பாவமுள்ளவர்களாகவும், உச்சந் தலை முதல் உள்ளங்கால்வரை பாவத்திலே இருக்கிறவர்களாகவும் இருக்கிறோம். ஆண்டவர் இந்த உலகத்தின் மக்களை பரிசுத்தத் திற்கென்று அழைக்கவந்தார். பாவிகளாகிய நாம் பரிசுத்தம் அடைந்து, தேவனுடைய ராஜியத்திற்கு போகவேண்டும் என்று சொல்லி, தேவனுடைய பிள்ளைகளாகிய நம் ஒவ்வொருவரையும் ஆண்டவர் அழைக்கிறார்.

**தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத்தெரிந்துகொண்டபடியே, – எபேசியர் 1:4.**

நம்மை எதற்காக அழைத்தார்? எதற்காக நம்மை தெரிந்து கொண்டார்? பரிசுத்தமுள்ளவர்களாயும், குற்றமற்றவர்களாயுமாக இருக்க நம்மை அவர் தெரிந்துகொண்டார். ஆகவே ஆண்டவர் இந்த உலகத்தின் மக்களை பார்த்து, பரிசுத்தம் பெறுவதற்கு அழைக்கிறார். பாவிகளாக இருக்கிற நம்மை, பரிசுத்தம் பெற வேண்டும் என்று ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளை அழைக்கிறார்.

## பரிசுத்தத்தை எப்படி பெற்றுக்கொள்வது?

**அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ள வர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். – எபிரேயர் 12:10.**

ஆண்டவர் மட்டும்தான் பரிசுத்தமுள்ளவர், நாம் யாவரும் பாவிகள். பாவிகளாகிய நாம் அந்த பரிசுத்தத்தை பெற்றுக்கொள்ள, அவருடைய பரிசுத்தத்தில் பங்கு பெற வேண்டும் என்று தேவன்

விரும்புகிறார். ஆண்டவருடைய பரிசுத்தத்திலே பங்குபெற்று வாழவேண்டும் என்று வேதம் சொல்லுகிறது.

ஆண்டவருக்கு தசமபாகம் கொடுத்து, அவருக்கு காணிக்கை கொடுத்து, பல நண்மைகளை செய்வதினால் நாம் பரிசுத்தம் அடைவதில்லை.

ஆதியிலே ஏதேன் தோட்டத்திலே ஆண்டவர் மனிதனோடு இருந்தார்.

**பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள். – ஆதி. 3:8.**

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்திலே இருந்தபோது, ஆண்டவர் அவர்களை சந்திக்கும்படியாக வந்தார். வாரத்திற்கு ஒரு முறை ஆண்டவர் அவர்களை சந்தித்து, அவர்களோடு அவர் தங்கியிருந்தார். எதற்காக அவர் தங்கியிருந்தார்?

மூன்று பேர் பரலோகத்திலே இருக்கிறார்கள். அவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர். அந்த மூன்று பேரிலே, இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு தேவன் வெளிப்படுத்தினார்.

**தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை, இவரே பிதாவைக் கண்டவர். - யோவான் 6:46.**

**என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை. - யோவான் 5:37.**

திருமறையிலே அநேக இடங்களிலே, ஒரு நாளும் ஆண்டவருடைய சத்தத்தை நாம் கேட்டதுமில்லை, அவருடைய ரூபத்தை கண்டதுமில்லை என்று சொல்லுகிறது.

**ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக் கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். – 1 தீமோத். 6:16.**

தேவனாகிய பிதா, இயேசு கிறிஸ்துவானவர் குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியானவரான தேவன், மூவரும் ஒரே சமமாக இருந்தவர்கள். மனிதர்கள் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுவதை விட்டு, பார்க்கக்கூடாத நிலமையிலிருந்த அந்த இடத்தை விட்டு, ஆண்டவர் தன்னை தாழ்த்தி, தன்னுடைய மகிமையும், யாவற்றையும் பிதாவினுடைய கரங்களில் ஒப்படைத்து விட்டு, மனிதர் பார்க்கும்படியாக அவர் உலகத்திற்கு வந்தார்.



அப்படி வந்தபோதுதான் அவருக்கு எகோவா என்று பெயர் வந்தது. அவர் எகோவாவாக வந்தபோது, அவர் தன்னை தாழ்த்தி வந்தார். அப்போதுதான் ஆதாமும் ஏவாளும் அவரோடே பேசவும் பார்க்கவும் முடிந்தது.

ஆதாமும் ஏவாளும் அந்த தோட்டத்திலே இருந்தபோது பரிசுத்தராக இருந்தார்கள். ஆனாலும் அந்த பரிசுத்தமான நிலைமை, பிதாவை பார்க்கக்கூடியதான பரிசுத்தமான நிலைமை யில்லை. அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து, பரிசுத்தத்தை வளர்த்து, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடைந்து, ஒரு நிலைமைக்கு வந்தால்தான், பிதாவை பார்க்கமுடியும். ஆகவே இந்த பரிசுத்தத்தை அடைவதற்கு, தேவனோடு முகமுகமாக பழுகுவதற்குதான் ஆண்டவர் விசேஷமான ஏற்பாடை ஏற்படுத் தினார். அது என்ன ஏற்பாடு?

**இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளை எல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். – எபிரேயர் 12:10.**

ஆண்டவர் ஆறு நாளிலே எல்லாவற்றையும் சிருஷ்டித்து, ஏழாம் நாளிலே தேவனுடைய பிள்ளைகளோடு ஓய்ந்திருந்தார் என்று திருமறையிலே நாம் வாசிக்கிறோம். அப்படி அவர் ஓய்ந்திருந்தபோது, ஆதாமும் ஏவாளும் அங்கேயிருந்தார்கள். ஆகவே ஆதாம் ஏவாள் பரிசுத்தம் அடைந்து, இன்னும் பரிசுத்தத்திலே வளர்ந்து, பிதாவை பார்க்கக்கூடிய ஒரு பரிசுத்தத் தன்மை வரும்வரைக்கும், ஆண்டவரோடுக்கூட அவர்கள் உறவாடவேண்டியதாக இருந்தது. இதற்காகவே ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு பரிசுத்த ஓய்வு நாளை ஏற்படுத்தினார்.

**பரிசுத்த ஓய்வுநாள் என்பது என்ன?**

ஏழாம் நாளை பரிசுத்த ஓய்வுநாளாக ஆண்டவர் ஏற்படுத்தினார். ஏன் பரிசுத்த ஓய்வுநாள் என்று அழைக்கப் படுகிறது?

மோசே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது திடிரென்று ஒரு புதர் எரிகிறதை கண்டான். புதர் எரியும்போது, அந்த தீ எல்லா இடத்திலும் பரவி ஆடுகளை கொன்றுவிடும். ஆகவே மோசே, அந்த ஆடுகளை மேய்த்துகொண்டு, அந்த தீ

எங்கும் பரவுவதற்கு முன்னதாக, ஆடுகளை தப்புவிக்கவேண்டும் என்று சொல்லி, வேகமாக அந்த ஆடுகளை அவன் ஓட்டிக்கொண்டுபோகிற சமயத்திலே, திரும்பி பார்த்து அந்த தீ எவ்வளவு தூரம் பரவிற்று என்று பார்த்தபோது, அந்த தீ பரவவேயில்லாததை கண்டான். அந்த செடி மாத்திரம்தான் எரிந்து கொண்டிருந்தது. பெரிய பிரகாசிக்கிற நெருப்பு, பரவவில்லை என்பதை அவன் கண்டான்.

அவன் மிகுந்த ஆச்சரியப்பட்டு, இது என்ன அதிசயமாக இருக்கிறதே, இந்த தீ பரவவேயில்லையே, என்று சொல்லி அந்த அதிசயத்தை பார்க்க கிட்ட வந்தான். அப்பொழுது,

**அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.** – யாத். 3:5.

எப்படி அந்த பூமி பரிசுத்தமாயிறென்றால் ஆண்டவர் அந்த இடத்திலே வந்தார். ஆண்டவருடைய பிரசன்னம் அங்கேயிருந்தது. அதனாலே அந்த இடம் பரிசுத்தமாயிற்று.

எரிகோ பட்டணத்தை பிடிப்பதற்கு முன்னதாக, யோசுவா ஒரு நாள் சாயஞ்காலமாக தனிமையிலே ஜெபம் பண்ணுவதற்கு போனான். அப்பொழுது உருவின பட்டயத்தோடு ஒருவர் நிற்பதை அங்கே கண்டார்.

**பின்னும் யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார்; உருவின பட்டயம் அவர் கையிலிருந்தது; யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான். அதற்கு அவர்: அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார்; அப்பொழுது யோசுவா தரையிலே முகங்குப்புறவிழுந்து பணிந்துகொண்டு, அவரை நோக்கி: என் ஆண்டவர் தமது அடியேனுக்குச் சொல்லுகிறது என்னவென்று கேட்டான். அப்பொழுது கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி: உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது என்றார்; யோசுவா அப்படியே செய்தான்.** – யோசுவா 5:13–15.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோசுவாவை வந்து சந்தித்தார். அப்படி சந்தித்தபோது அவர், நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி பரிசுத்தமானது, உன் பாதரட்சைகளைக் கழற்றிப் போடு என்றார். தேவன் இருக்கிற இடம் பரிசுத்த பூமியாக இருக்கிறது.

ஆகவே ஏழாம் நாளிலே ஆண்டவர் ஏதேன் தோட்டத்திலே வந்துபோது, அந்த ஏதேன் தோட்டத்திலே தேவனுடைய



பிள்ளைகளோடு அந்த நாளை கழித்தபோது, அந்த நாள் பரிசுத்தமான நாளாக இருந்தது. அந்த நாளை பரிசுத்த ஓய்வுநாள் என்று வேதம் அழைக்கிறது. தேவனுடைய பிரசன்னம் அந்த நாளில் இருந்தது. நாம் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்றால், தேவனோடு உறவாடவேண்டும். அவருடைய பரிசுத்தத்தில் நாம் பங்குபெறவேண்டும்.

இறைவனோடு உறவாடதான் தேவன் இந்த பரிசுத்த ஓய்வுநாளை தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுத்தார். அந்த பரிசுத்த ஓய்வுநாளை பரிசுத்தமாய் கைக்கொள்ள ஆண்டவர் விரும்புகிறார். அந்த ஓய்வுநாளை அவருடைய கட்டளைகளில் நான்காம் கட்டளையிலே வைத்துவிட்டார்.

**ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;** – யாத். 20:8.

இந்த கற்பனையை மறந்துவிடாதே என்று சொல்லி, அதை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்று சொன்னார். பரிசுத்த கடவுளோடு கர்த்தருடைய பிள்ளைகள் அந்த ஓய்வு நாளிலே அவரோடுக் கூட இருக்கிறோம். அவரை நாம் பார்க்காவிட்டாலும், திருமறை சொல்லுகிற வசனங்களின்படி அவருடைய பிரசன்னம் நம்மோடு இருக்கிறது என்று நிச்சயப்படுத்துகின்றன. ஆகவே ஆண்டவர் அந்த நாளில் தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மிடத்தில் வாசம்பண்ணுகிறார். அப்படி அவர் இருக்கும்போது, அவர் ஓய்ந்திருக்கிற வண்ணமாகவே நாமும் ஓய்ந்திருந்து, அந்த பரிசுத்தத்தில் நாம் பங்குகொள்ளவேண்டும் என்று திருமறை நமக்கு விசேஷவிதமாக சொல்லுகிறது.

வாரத்தில் ஏழாம் நாளை மட்டும்தான் அவர் பரிசுத்த ஓய்வுநாள் என்று அழைக்கிறார். பரிசுத்த தேவாலயம் என்று சொன்னால், அவருடைய பிரசன்னம் அங்கே இருக்கிறது. எங்கே பரிசுத்தம் என்று சொல்லுகிறோமோ அங்கே அவருடைய பிரசன்னம் இருக்கிறது. ஆகவே பரிசுத்த ஓய்வுநாள் என்று நாம் சொன்னால், அவருடைய பிரசன்னம் அங்கே இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகவே அந்த பரிசுத்த ஓய்வுநாளில், கர்த்தருடைய பிள்ளைகள், ஆண்டவருடைய சநிதானத்தில் உட்கார்ந்து, ஓய்வெடுத்து அவரோடுக்கூட பேசி, அவருடைய வார்த்தைகளை வாசித்து, அந்த நாள் முழவதும் அவருடைய பாதத்திலே உட்கார்ந்து, அந்த பரிசுத்தத்தை பெற்றவர்களாக நாம் பரிசுத்தத்தில் மேல் பரிசுத்தம் அடைந்து , தேவனுடைய ராஜியத்திற்கு போகவேண்டும் என்பதை குறித்து

நாம் வேத்ததிலே வாசிக்கிறோம்.

இந்த பரிசுத்த ஓய்வுநாளை குறித்து திருமறையிலே ஆயிரத்துக்கு அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. அவர் எப்படி அந்த ஓய்வுநாளை அமைத்தார்?

**ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்;... – யாத். 20:9,10.**

தேவனுடைய பிள்ளைகள் மத்தியிலே வருவதற்கு ஆண்டவர் ஒரு நாளை தெரிந்துகொண்டிருக்கிறார். அந்த ஏழாவது நாளை பரிசுத்த ஓய்வுநாளாக தெரிந்துகொண்டதினால் அது நம்முடைய ஓய்வுநாள் அல்ல. அது தேவனுடைய ஓய்வுநாள் என்று வேதம் சொல்லுகிறது. சிலர், ஏன் நாமாகவே ஒரு நாளை தெரிந்துகொண்டு அந்த நாளில் ஓய்ந்திருக்கலாமே! என்று சொல்லுகிறார்கள்.

**நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக்கொள்ளாதவனும் கர்த்தருக் கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான்.... – ரோமர் 14:6.**

இன்றைக்கு கிறிஸ்மஸ் என்று நாம் கொண்டாடுகிறோம். அந்த நாளை கொண்டாடுங்கள் என்று வேதத்திலே ஒரு வசனமும் சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஒரு கட்டளையும் கிடையாது. ஆனாலும் மனிதர்களாகிய நாம், ஆண்டவர் 25–ந்தேதி பிறந்தார் என்று கிறிஸ்மஸாக கொண்டாடவேண்மென்று நாம் ஒரு சபையாக சேர்ந்து அந்த நாளை நியமித்துகொண்டோம். அந்த நாளை கடவுள் நியமித்ததல்ல! அதேபோல ஈஷ்டர் கொண்டாட வேண்மென்று வேதத்திலே எந்த இடத்திலும் எழுதப்படவில்லை. ஆகவே நாம்தான் அதை கொண்டாடவேண்டும் என்று அந்த நாளை ஒரு விசேஷமாக வைத்துகொண்டோம்.

வேதத்திலே புது வருஷத்தை கொண்டாடுங்கள் என்று சொல்லவில்லை. அதை நாமாகவே ஒரு ஸ்தோத்திர பண்டிகையாக நாமாகவே நியமித்து கொண்டோம். ஆகவே இந்த பரிசுத்த ஓய்வு நாளை மனுஷன் வைத்ததல்ல! இது ஆண்டவர் நியமித்த நாள். அந்த நாளிலே ஆண்டவருடைய பிரசன்னம் இருக்கிறபடியால், அதை நாம் பரிசுத்தமாய் கடைபிடிக்கவேண்டும்.

**ஏன் அவர் ஏழாம் நாளை நியமித்தார்?**

ஒரு நாள், என்னுடைய மகளின் பிறந்தநாளை கொண்டாட வேண்மென்று இருந்தோம். அப்பொழுது நாம் ஒரு கேம்புக்கு போகவேண்டியதாக இருந்தது. என்னுடைய மகள் என்னிடத்தில்:



அப்பா! எப்படியாவது என்னுடைய பிறந்தநாளுக்கு வந்துவிடுங்கள் என்று சொன்னாள். நான் அந்த நேரத்தில் நேபாளுக்கு போகவேண்டியதிருந்தது. நாங்கள் இருக்கிற இடம் ஓசூர். ஆகவே அவ்வளவு தூரத்திலிருந்து என் மகளின் பிறந்த நாளுக்கு வரமுடியுமா? அதனால் நான் என் மகளிடம் விளையாட்டிற்கு சொன்னேன்: சரி உன்னுடைய பிறந்தநாளை இந்த முறை ஒத்திவைத்துவிடலாமா? என்று கேட்டேன். அதற்கு மகள்: எப்படி பிறந்த நாளை ஒத்திபோடமுடியும்? என்று கேட்டாள்.

ஏழாவது நாளை ஆண்டவர் எதற்காக தெரிந்துகொண்டார் என்றால், ஆறு நாட்களிலும் ஆண்டவர் வானம் பூமி சமுத்திரம் யாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளை சிருஷ்டிப்பின் ஞாபக சின்னமாக வைத்தார். அந்த ஏழாம் நாளிலே தேவனுடைய பிள்ளைகள் ஆண்டவரோடுகூட தங்கி, இயற்கையின் சக்திகளை பார்த்து, இறைவன் உண்டாக்கின காரியங்களை பார்த்து அன்றைக்கு ஸ்தோத்திம் செலுத்தும்படி, துதி செலுத்தும்படியாக அந்த நாள் நியமிக்கப்பட்டது.

தாம் செய்த தம்முடைய கிரியைகளையெல்லாம் ஏழாம் நாளிலே நிறைவேற்றி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். அந்த நாளிலே அவர் ஓய்ந்திருந்தார். அந்த நாளிலே அவர் மனுஷரோடு வந்து ஓய்ந்திருந்தார். கடவுள் ஏன் ஓய்ந்திருக்கவேண்டும்? களைப்பாகிவிட்டாரா? அவருக்கு ஓய்வு தேவையா?

**பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையே. அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது. – ஏசாயா 40:28.**

அவர் என்றைக்கும் சோர்ந்துபோவதில்லை. அவர் நமக்காக வந்து ஓய்ந்திருக்கும்போது, கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், நமக்காக வேலைகள் செய்துகொண்டிருந்தால் எப்படி? ஆகவே கர்த்தர் சொல்லுகிறார்: நான் ஓய்ந்திருக்கிறதுபோல நீங்களும் அந்த நாளில் ஓய்ந்திருந்து, என்னிடத்திலே வாருங்கள் என்று சொன்னார். இந்த ஓய்வுநாள் பரலோகத்திற்காக உண்டாக்கப் படவில்லை, பூமிக்காக உண்டாக்கப்பட்டது. இந்த பூமிக்காக பரலோகமே ஓய்ந்திருக்கிறது. அப்படியென்றால் நாம் என்ன செய்யவேண்டும்? நாம் மாத்திரம், இல்லை நான் ஓய்ந்திருக்க மாட்டேன் என்று சொன்னால் கற்பனையை மீறுகிறதல்லவா ஆகும்? அன்றைய நாளில் யாரும் எந்தவிதமான வேலைகளையும் செய்யாதிருக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார்.

நம்மை ஆசீர்வதிக்க, நம்மோடு உறவாட, நம்முடைய கவலைகளை மீட்பதற்கு, நம்முடைய கண்ணீரை துடைப்பதற்கு, நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுப்பதற்கு, அந்த விசேஷமான ஓய்வுநாளை ஆண்டவர் ஏற்படுத்திவைத்திருக்கிறார்.

அன்றைய நாளில் எல்லா பாரத்தையும் அவரிடத்தில் கொண்டுவரவேண்டும். அவரிடத்தில் அமர்ந்து, அவரை மகிமைப் படுத்தவேண்டும். அந்த மாபெரும் நாளில் பெரிய ஆசீர்வாதங்கள் அவரிடத்திலிருந்து நமக்கு வருகிறது. ஏனென்றால் அந்த நாள் ஆசீர்வதிக்கப்பட்ட நாளாக இருக்கிறது.

**தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். – ஆதி. 2:3.**

இன்றைக்கு நம்முடைய வாழ்க்கையிலே நமக்கு என்ன வேண்டும்? தேவனுடைய ஆசீர்வாதம் வேண்டும். தேவன் நம்மை எல்லா காரியத்திலும் ஆசீர்வதிக்கவேண்டும்.

**கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். – நீதி. 10:22.**

பாலாக் என்ற ராஜா பிலேயாம் என்ற தீர்க்கதரிசியை அழைத்துகொண்டுபோய், இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படி கட்டளையிட்டான். ஆனால் அந்த ஜனங்களுக்கு ஆசீர்வாதம் வந்தது. அப்பொழுது பாலாக் பிலேயாமை நோக்கி: இந்த ஜனங்களை சபிக்கும்படி உனக்கு அதிகமான பொருளையும் பொன்னையும் கொடுத்தேன். ஆனால் நீயோ சபிக்காமல் ஆசீர்வதிக்கிறாய். ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்டபோது, பிலேயாம் அவனை நோக்கி:

**இதோ, ஆசீர்வதிக்கக் கட்டளைபெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக்கூடாது. –எண்ணாகமம் 23:20.**

ஆண்டவர் ஆசீர்வதித்தது, ஆசீர்வதிக்கப்பட்டேயிருக்கும்.

ஈசாக்கு வயதானபோது ஏசாவை அழைத்து, நீ போய் வேட்டையாடி எனக்கு இஷ்டமானபடி சமைத்துவா, நான் அவைகளை சாப்பிட்டு உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொன்னதை ரெபேக்காள் கேட்டு, யாக்கோபினிடத்திலே போய் ஆட்டுகுட்டியை பிடித்து, சமைத்து அவன் கையிலே கொடுத்து, நீ தகப்பனிடத்தில் போய் அந்த ஆசீர்வாதத்தை வாங்கிக்கொள் என்று சொன்னாள். அவன் வந்து தகப்பனை ஏமாற்றி, தான் ஏசா என்று சொல்லி அந்த ஆசீவாதத்தை பெற்றுக்கொண்டான். அப்படி பெற்றுக்கொண்டபோது ஏசா வந்து தகப்பனே என்னை



ஆசீர்வதியும் என்று சொன்னபோது, அவன் தகப்பன் இப்பொழுது வந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டானே அவன் யார்? என்று கேட்டான். ஏசா அதற்கு: தகப்பனே எனக்கு ஒரு ஆசீர்வாதமாவது இல்லையா? என்று கேட்டான்.

**ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடிந்தபோது, யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் சமுகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய ஏசா வேட்டையாடி வந்து சேர்ந்தான். அவனும் ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்து, தன் தகப்பனண்டைக்குக் கொண்டுவந்து, தகப்பனை நோக்கி: உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என் தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பாராக என்றான். அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு: நீ யார் என்றான்; அதற்கு அவன்: நான் உமது மூத்த மகனாகிய ஏசா என்றான். அப்பொழுது ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி எனக்குக்கொண்டு வந்தானே, அவன் யார்? நீ வருமுன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் இருப்பான் என்றான். – ஆதி. 27:30–33.**

ஆகவே ஈசாக்கு தேவனுடைய ஆசீவாதங்களை யாக்கோபுக்கு கொடுத்தது கொடுத்ததே! அதை மாற்றமுடியாது, அதேபோல ஏழாம் நாளிலே வைக்கப்பட்ட ஆசீர்வாதம் பெரும் ஆசிர்வாதம். அந்த ஆசீர்வாதம் முதல் நாளுக்கு தள்ளிவைக்கப் படவில்லை. அவர் அன்று சொன்னது சொன்னதே. இன்றுவரை அந்த ஏழாம் நாள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உலகத்திலே மிக மேன்மையான ஜாதி அந்த யூத ஜாதிகளே! அவர்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றல் அவர்கள் இன்றுவரை அந்த பரிசுத்த ஓய்வுநாளாகிய சனிக்கிழமையை பரிசுத்தமாய் கடைபிடித்து வருகிறார்கள்.


கர்த்தர் அந்த ஏழாம் நாளை பரிசுத்தப்படுத்தினார். பரிசுத்தப் படுத்துதல் என்றால் என்ன?

ஒரு கோவிலை பிரதிஷ்டை பண்ணுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இது கடவுளுடைய சமூகம் என்று அந்த கோவிலை பரிசுத்தப் படுத்துகிறார்கள். அந்த கோவிலுக்கு ஒரு மனிதனை நியமித்து, அவரை போதகர் என்று அபிஷேகம் பண்ணுகிறார்கள். அதேப்போல ஆண்டவர் இந்த ஏழாம் நாளை எடுத்து பரிசுத்தப்படுத்தி ஆசிர்வதித்தார். ஆகவே அந்த நாளிலே அவரிடத்திலே யாவரும் வரவும், அவருக்கு ஆராதனை செய்யவும், அவரை துதித்து பாடவும், அவரோடுகூட

உறவாட அந்த நாளை விசேஷமாக அபிஷேகம்பண்ணி அதை பரிசுத்தமாக்கினார். நாம் பரிசுத்தமடைவதற்கு, தேவனோடு உறவாடும்படி நமக்கு ஒரு நேரம் வேண்டும். தேவன் நம்மோடுக் கூட உறவாடும்படி நமக்கு நேரம் வேண்டும். அப்படி உறவாடுதலின் மூலமாகதான் நாம் அவருடைய பரிசுத்தத்தை அடைகிறோம். அவருடைய பரிசுத்தத்தை அடைந்தால், தேவனுடைய முத்திரையை பெறுகிறோம்.

## ஏழாம் நாள் என்பது எந்த நாள்?

வேதத்திலே வாரத்தின் நாட்கள் எழுதப்படவில்லை. திங்கள் செவ்வாய் என்று நாட்கள் எழுதப்படவில்லை. முதல் நாள், இரண்டாவது நாள் என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. யூதர்களின் காலண்டரிலே முதல் நாள் ஞாயிறு என்றுதான் வருகிறது. ஏழாம் நாளிலேதான் சனிகிழமை வருகிறது. அது ஆதியிலிருந்து அப்படிதான் செய்துவருகிறார்கள்.




அந்த இஸ்வேல் நாடு மட்டுமே சனி கிழமை ஓய்வுநாள் என்று, இன்றுவரை உலகம் முழவதும் எங்கிருந்தாலும் ஆசரித்து வருகிறார்கள்.



ஆகவே அன்றிலிருந்து இன்று வரை அனுசரித்து வரும் அவர்களின் பழக்கங்கள் மாறவில்லை. புறஜாதிகளான நாம் இயேசு கிறிஸ்துவிற்கு பிறகு அவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றி இன்று அவர்களை போல நாம் பரிசுத்தமாவதற்கு கர்த்தர் நம்மை அழைத்தார். அவருக்கு பெரும் நன்றியுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும்.

ஆண்டவர் பரிசுத்தப்படுத்தின அந்த ஏழாம் நாள் எது?

இன்றைய வானசாஸ்திர காலண்டரிலே ஏழாவது நாள் சனி கிழமை என்று போடப்பட்டிருக்கிறது.

ரோமன் கத்தோலிக்க திருசபையிலே பழைய வேதாகமத்திலே கீழே குறிப்புகள் இருக்கும். அந்த குறிப்புகளிலே ஆதியாகமத்திலே ஏழாம் நாள் என்று வருகிறதல்லவா? அந்த இடத்தின் குறிப்புகளிலே சனி கிழமை என்று போடப் பட்டிருக்கிறது.

ரோமன் கத்தோலிக்கிலே ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாக பத்து பிரமாணத்தை படித்து சொல்லவேண்டும். அந்த பத்து பிரமாணத்தை படிக்கும்போது, ஒவ்வொரு பிரமாணமாக எடுத்து விவரித்து எழுதியிருக்கிறார்கள். அதிலே நாலாவது பிரமாணத்திலே ஓய்வுநாளை பற்றிதான் இருக்கிறது. ஆனால், அந்த குறிப்பிடத்திலே மூன்றாவது இடத்திலே நான்காவது கற்பனையை புகுத்திவிட்டார்கள். அந்த மூன்றாவது கற்பனையிலே ஏழாம் நாள் ஓய்வுநாள் என்று போடப்பட்டிருக்கிறது. அந்த ஏழாம் நாள் சனிகிழமை என்று போடப்பட்டிருக்கிறது. சனி கிழமை ஓய்வுநாளானால் ஞாயிற்று கிழமையை ஏன் நாம் ஆசரிக்க வேண்டும்? கத்தோலிக்க திருச்சபையானது ஓய்வுநாளை ஞாயிற்று கிழமைக்கு மாற்றிபோட்டது என்று அதில் குறிப்பிடப்பட்டிருக் கிறது.

அநேக கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையை கைக்கொண்டு வருகிறார்கள். ஏன் என்றால் இயேசு கிறிஸ்து உயிரோடு எழுந்தார். அந்த உயிரோடு எழுந்த நாளை நாம் ஆசரிக்கவேண்டும் என்று சொல்லி பலர் அந்த நாளை ஆசரிக்கிறார்கள். வேதத்திலே எந்த நாளிலே இயேசு உயிரோடே எழுந்தார்? வாரத்தின் முதல் நாளிலே அவர் உயிரோடே எழுந்தார். இன்றைக்கு வாரத்தின் முதல் நாள் ஞாயிற்று கிழமை என்று சொல்லுகிறோம். வாரத்தின் முதல் நாள் ஆண்டவர் உயிரோடு எழுந்தார் என்று வேதம் சொல்லுகிறது.

அப்படியானால் அவர்கள் சொல்லும் வாரத்தின் முதல் நாள் ஞாயிற்று கிழமையானால் ஏழாம் நாள் எந்த நாளாக இருக்கிறது? சனிக்கிழமை வருகிறதல்லவா?

இன்றைக்கு யூதர்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள். அவர்கள் ஆதியிலேயிருந்து இன்று வரை சனிக்கிழமைதான் ஓய்வுநாளாக கடைப்பிடிக்கிறார்கள்.

இன்றைக்கு மகமதியர்களுக்கு விசேஷமான நாள் ஆறாவது நாளாக இருக்கிறது. அந்த ஆறாவது நாள் வெள்ளிகிழமையாக இருக்கிறது. அப்படி அந்த ஆறாவது நாள் வெள்ளி கிழமையாக இருந்தால் ஏழாவது நாள் சனிக்கிழமைதானே வருகிறது?

இன்றைக்கு உலகத்திலே எபிரேய பாஷை, அரபி பாஷை, லத்தீன் பாஷை என்ற நாற்பது மொழிகளிலே ஏழாவது நாளை சபாத்டே என்று பெயரிடப்பட்டிருக்கிறது. சபாத்டே என்றால் ஓய்வுநாள் என்று பொருள்.

இந்த ஏழாவதுநாள் சனிக்கிழமை என்று திட்டவட்டமாக மேலே குறிப்பிட்ட ஆதாரங்கள் கூறுகிறது. ஆகவே ஆறு நட்களும் ஆண்டவர் கிரியை செய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்த நாள் சனிகிழமை. அவர் ஆசீர்வதித்த நாள் சனிகிழமைதான். அவர் பரிசுத்தப்படுத்திய நாளும் சனிகிழமைதான். ஆண்டவருடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்ட நாளை விட்டு விட்டு, வேரொரு நாளை கைக்கொண்டால் என்ன லாபம்? பரிசுத்தமாக்கப்பட்ட நாளை விட்டுவிட்டு வேறே நாளிலே நாம் ஓய்ந்திருந்தால் ஆசீர்வாதம் எப்படி வரும்?

இன்றைக்கு அந்த நாளிலே நாம் பரிசுத்தமாக்கப்படவேண்டும். அந்த நாள் சனிக்கிழமையே! தேவனும் ஓய்ந்திருக்கும் நாள் அந்த பரிசுத்த சனிக்கிழமையே!

**பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக் கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றார். –மாற்கு 2:27,28.**

அந்த ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

இந்த பரிசுத்த ஓய்வுநாளை ஏன் கடைப்பிடிக்கிறோம் என்றால், ஆறு நாட்களுக்குள்ளே அண்டசராசரங்களை படைத்த உண்மை யான தெய்வத்துக்கு அடையாளம் அந்த ஓய்வுநாள் காட்டுகிறது.

உலகத்தை படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உண்மையான தெய்வம் என்று அந்த ஏழாம் நாள் காட்டுகிறது.



சாத்தான், தான் கடவுளாக ஆகவேண்டும் என்று விரும்பினபோது, இந்த ஓய்வுநாளை அவன் வெறுத்தான். இந்த ஓய்வுநாள்தான் ஆண்டவர் யாவற்றையும் படைத்தார் என்று சுட்டிகாட்டுகிறது. அது அடையாள சின்னமாக இருக்கிறது. சாத்தான் அந்த அடையாள சின்னத்தை ஒழித்துவிட்டால், இயேசுவானவர் இந்த அண்டசராசரங்களின் சிருஷ்டி கர்த்தா என்பதை ஒழித்துவிடலாம். அப்படி இயேசு கிறிஸ்துவானவர் இல்லையென்று சொல்லி விட்டால், தான் கடவுளாக ஆக முடியும் என்று சாத்தான் நினைத்தான்.

ஆகவே கடவுள் அண்டசராசரங்களை சிருஷ்டித்தவர் என்பதை சுட்டிகாட்டுகிற, அந்த அடையாளமாகிய ஏழாம் நாள் ஓய்வு நாள் ஆசரிப்பை ஒழித்துவிட்டால், அப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிருஷ்டி கர்த்தா என்று சொல்லுவதற்கு ஒன்றும் இருக்காது. தான் உலகத்தின் கடவுள் என்று சொல்லிக் கொள்ளலாம்.

அதனால்தான் இன்று ஓய்வுநாள் வேரொரு நாளில் மாற்றப்பட செய்தான். ஆகவே வேரொரு நாளை நாம் பரிசுத்தமாய் எண்ணாமல், உண்மையான அந்த ஓய்வுநாளை பரிசுத்தமாய் எண்ணவேண்டும். அந்த நாளில் ஓய்ந்திருக்கவேண்டும். அந்த ஓய்வுநாள் இரட்சிப்பின் சின்னமாகவும் இருக்கிறது.

**நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும். – யாத். 31:13.**

**நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்கு, கட்டளையிட்டேன். –எசே. 20:12.**

முதலாவது: ஆறு நாட்களுக்குள்ளாக அண்டசராசரங்களை படைத்தார் என்பதின் அடையாள சின்னமாக இருக்கிறது இந்த ஓய்வுநாள்.

இரண்டாவது: பாவிகளான நம்மை இரட்சிக்கிறார் என்பதின் அடையாள சின்னமாக இருக்கிறது இந்த ஓய்வுநாள்.

மூன்றாவது: அந்த நாளை கடைப்பிடிக்கிறவர்களுக்கு ஆசீர்வா தங்கள் உண்டு என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்தபடி, உன் காலை விலக்கி, உன்வழிகளின்படி, நடவாமலும், உனக்கு இஷ்மானதைச் செய்யாமலும் உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து**

**ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணு வாயானால்,அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்டி பண்ணி உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று. – ஏசாயா 58:13,14.**

பரிசுத்தப்படுவோம்! ஆண்டவர் நியமித்த நாளில் ஓய்ந்திருந்து இரட்சிக்கப்படுவோம். அவருடைய நாளை நாம் பரிசுத்தமாய் எண்ணி, அதில் பயபக்தியாய் இருப்போமானால் நமக்கு வரும் அவருடைய ஆசீர்வாதங்கள் ஏராளம்! ஏராளம்!

–ஆமென்

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;

ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக;

ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம்.

கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

**- யாத். 20 : 8–11.**